

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற 2025 முதலமைச்சர் கோப்பை கல்லூரி மாணவர்களுக்கான பளுதூக்குதல் விளையாட்டுப் போட்டியில் 98 கிலோ உடல் எடை பிரிவில் வீரர்கள் பளுதூக்குவதை பார்வையிட்டு, கைத்தட்டி உற்சாகப் படுத்தினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, உள்பட அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற 2025 முதலமைச்சர் கோப்பை கல்லூரி மாணவர்களுக்கான பளுதூக்குதல் போட்டியில் 88 கிலோ உடல் எடை பிரிவில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பதக்கம் அணிவித்து, பரிசுத் தொகை காசோலை, சான்றிதழ் மற்றும் வீரன் நினைவுச் சின்னம் வழங்கிப் பாராட்டினார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.10.2025) சென்னை நேரு விளை யாட்டரங்கில் நடைபெற்ற 2025 முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற வீராங்கனைகளிடம், பங்கேற்ற விளையாட்டுப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகளின் ஏற்பாடுகள் குறித்து கலந்துரையாடினார். இந்நிகழ்வில் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, உள்பட அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் உடனிருந்தனர்.

### 2025 முதலமைச்சர் கோப்பை கல்லூரி மாணவர்களுக்கான

# பளுதூக்குதல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கம் - பரிசுத் தொகை - சான்றிதழ்கள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, அக்.13-**

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2025 முதலமைச்சர் கோப்பை கல்லூரி மாணவர்களுக்கான பளுதூக்குதல் போட்டியில் 88 கிலோ உடல் எடை பிரிவில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பதக்கம் அணிவித்து, பரிசுத் தொகை காசோலை, சான்றிதழ் மற்றும் வீரன் நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டினார்.**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.10.2025) சென்னை நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற 2025 முதலமைச்சர் கோப்பை கல்லூரி மாணவர்களுக்கான பளுதூக்குதல் போட்டியில் 88 கிலோ உடல் எடை பிரிவில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பதக்கம் அணிவித்து, பரிசுத் தொகை காசோலை, சான்றிதழ் மற்றும் வீரன் நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டினார்.

தொடர்ந்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற 2025 முதலமைச்சர் கோப்பை கல்லூரி மாணவர்களுக்கான பளுதூக்குதல் விளையாட்டுப் போட்டியில் 98 கிலோ உடல் எடை பிரிவில் வீரர்கள் பளுதூக்குவதை பார்வையிட்டு, கைத்தட்டி உற்சாகப் படுத்தினார்.

மேலும், 2025 முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுடன் உணவு அருந்தினார். 2025 முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற வீராங்கனைகளிடம் விளையாட்டுப் போட்டிகளின் ஏற்பாடுகள், பங்கேற்பு குறித்து துணை முதலமைச்சர் அவர்கள் கலந்துரையாடினார்.

இந்நிகழ்வில், முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற வீராங்கனைகள், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடன் தன்புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி உள்பட அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் உடனிருந்தனர்.



ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க 100 மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதி மாவட்ட, ஒன்றிய, பேரூர், கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மொடக்குறிச்சி கிருஷ்ணா மஹாலில் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சு.குணசேகரன் ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில், தொகுதி பொறுப்பாளர் கே.இ.பிரகாஷ் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் தொகுதி பார்வையாளர் நா.தமிழ்செல்வன், உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், BLA2, BDA, கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.

### ‘தொல்குடி’ திட்டத்தின்கீழ் – ரூ.78.82 இலட்சம் மதிப்பீட்டில்

# பழங்குடியினர் விவசாய சங்கங்களுக்கு - வேளாண் இயந்திர தளவாடப் பொருட்கள்!

## சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

*சென்னை, அக். 13-*

தொல்குடி திட்டத்தின் கீழ் பழங்குடியினர் விவசாய சங்கங்களுக்கு வேளாண் இயந்திர தளவாடப் பொருட்கள் ரூ.78.82 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப் படவுள்ளது என்று சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் ‘தொல்குடி ஐந்திணை’ திட்டத்தின் கீழ் பழங்குடியினர் விவசாய சங்கங்களுக்கு முதற்கட்டமாக வேளாண் இயந்திரங்களை வழங்கி தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் ‘தொல்குடிஐந்திணை’ திட்டத்தின் கீழ் பழங்குடியினர் விவசாய சங்கங்களுக்கு வேளாண் இயந்திரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (11.10.2025) மாவட்ட ஆட்சியரகத்தில் வழங்கினார்.

பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் வேளாண் பெருமக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக பழங்குடியின விவசாயிகள் தங்கள் வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும். பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய வேண்டும் என்ற உயரிய நோக்கோடு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள்.

அந்தவகையில், முதலமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டம் வருகையின் போது சேலம் மாவட்டத்தில் உள்ள சேலம் கிழக்கு பூர்வமலை பழங்குடியின விவசாயிகள் மேம்பாட்டு சங்கங்களுக்கு வேளாண் இயந்திரங்கள் வழங்கப்படும் என அறிவித்தார்கள். அதன்தொடர்ச்சியாக கெங்கவல்லி வட்டம், வாழக்கோம்பை, மூக்காக்கவுண்டன் புதூர் மற்றும் சேலம் வட்டம், அடிமலைப்புதூர் ஆகிய பகுதியைச் சேர்ந்த பழங்குடியினர் விவசாய சங்கங்களுக்கு இயந்திர தளவாடப் பொருட்கள் தொல்குடி திட்டத்தின் கீழ் ரூ.78.82 இலட்சம் மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்தொடர்ச்சியாக இன்றைய தினம், முதற்கட்டமாக மேற்படி பழங்குடியினர் விவசாய மேம்பாட்டு சங்கங்களுக்கு தற்போது 6 டிராக்டர்கள் மற்றும் 5 ரோட்டாவேட்டர்கள் இந்நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பழங்குடியின விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் மகேந்திரா டெக்ப்ளஸ், சாப் கட்டர், மகேந்திரா டிரேக்டர், நெல் வைக்கோல் சுருட்டும் இயந்திரம், பேட்டரி ஸ்பிரேயர், தேங்காய் மட்டை உரிக்கும் இயந்திரம், களை எடுக்கும் இயந்திரம், மினி டிரேக்டர், தீவன கலவை தாவரம் கலவை மற்றும் அரைத்தல், பாக்குத்தட்டு தயாரிக்கும் இயந்திரங்கள், தானியங்கள் அரைக்கும் இயந்திரம் ஆகிய இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்றுள்ள விவசாய சங்கங்களை சேர்ந்த விவசாயிகள் இதனை நல்ல முறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப் படுகிறது.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, பழங்குடியினர் நலன் (திட்ட அலுவலர்) திருமதி சுகந்தி பரிமளம் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர்.



நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட சந்திரசேகரபுரம் ஊராட்சி, முருங்கப்பட்டி ஊராட்சி, வெண்ணந்தூர் ஒன்றியம் தொட்டிவலசு ஊராட்சி உள்ளிட்ட ஊராட்சி பகுதிகளில் வீதி தோறும் சட்டமன்ற உறுப்பினர் என்ற தலைப்பில் பொதுமக்களிடத்தில் குறை கேட்பு முகாமில் அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு அப்பகுதி பொதுமக்களிடத்தில் குறைகளை கேட்டறிந்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் கே.பி.ஜெகநாதன், ஆர்.எம்.துரைசாமி மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள், அதிகாரிகள், கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் “தொல்குடி ஐந்திணை” திட்டத்தின் கீழ் பழங்குடியினர் விவசாய சங்கங்களுக்கு வேளாண் இயந்திரங்களை மாவட்ட ஆட்சியரகத்தில் வழங்கினார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மேயர் ஆ.இராமச்சந்திரன், துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, இரா.ரவிக்குமார், திருமதி சுகந்தி பரிமளம் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் உள்ளனர்.